# பொதுக்காலத்தின் 31 ஆம் ஞாயிறு

## திருவழிபாடு ஆண்டு C

### இன்றைய வாசகங்கள்:

சாலமோனின் ஞான நூலிலிருந்து வாசகம் 11: 22 - 12: 2,
திருப்பாடல்கள் 145: 1-2. 8-9. 10-11. 13-14,
திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய
இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 1: 11 - 2: 2,
லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 19: 1-10

### திருப்பலி முன்னுரை:

இறைமகன் இயேசுவில் இனிமையான குழந்தைகளே, இளைஞர்களே, பெரியோர்களே உங்கள் அனைவருக்கும் என் அன்பான வாழ்த்தைக்கூறி மகிழ்கிறேன். ஆண்டின் பொதுக்காலம் 31 ஆம் வார திருப்பலி வழிபாட்டில் பங்கேற்றுக்கொண்டிருக்கும் அனைவருக்கும் என் அன்பு வாழ்த்தைக்கூறி மகிழ்கிறேன். எல்லாம் வல்ல இறைவன் அன்பில் நிறைந்து வாழ்பவர்.எல்லாருக்கும் தேவையான அருளை நிறைவாகவே வழங்கும் பொன்மனம் கொண்டவர். அவருடைய அன்பிற்கு உரியவராக இந்த உலகில் வாழ்பவர், வாழ முனைபவர், இன்னும் அதிகமாக அவரால் வழிநடத்தப்படுகிறார். இறைவனின் அருள், அன்பு அவருக்கு நிறைந்து வழியும் பேருடைய நிலையை அவர் பெறுவார். ஆண்டவரின் நாளாகிய இன்று தாயாகிய திருச்சபை இந்த மேலான கருத்தை நம்முன்வைத்து பொருளுள்ள வாழ்வு வாழ நம்மை அன்புடன் அழைக்கிறது.

இன்றைய இறைவாக்கு வழிபாடு, இரு கண்களாக நம் மனமாற்றம், இறைவனின் மீட்பு இவ்விரண்டையும் நம் சிந்தனைக்கு விருந்தாகத் தருகின்றது! ஒன்று சக்கேயுவின் கண்கள் மற்றொன்று இயேசுவின் கண்கள். கண்கள் சந்தித்தன. மனமாற்றம் விரைவாக ஏற்பட்டது. இயேசுவின் வரவால் அவர் இல்லத்திற்கு மீட்பு உண்டானது. குள்ளமான சக்கேயு இன்று உயர்த்தப்பட்டார். எழுந்து நின்று தவறுகளை ஏற்றுக்கொண்டு அதற்குக் கைம்மாறுச் செய்யவும் தயாரானார். சக்கேயு காட்டு மரத்தில் ஏறினார் எரிக்கோவில். இயேசு கல்வாரி மரத்தில் ஏறினார் எருசலேமில். சக்கேயு ஏறியதால் அவருக்கு மீட்பு கிடைத்தது. இயேசு ஏறியதால் மனுக்குலம் அனைத்திற்கும் மீட்பு கிடைத்தது. இயேசுவோடு ஒன்றாய்க் கலந்து அவரைப்போலவே நம்மையே கரைத்து ஒளிவீசும் மக்களாக திருப்பலியில் ஒன்றிணைவோம்.

முதல் வாசகம்

நீர் எல்லாம் வல்லவராய் இருப்பதால் எல்லார் மீதும் இரங்குகின்றீர்.

சாலமோனின் ஞான நூலிலிருந்து வாசகம் 11: 22 - 12: 2

ஆண்டவரே, தராசில் மிக நுண்ணிய எடை வேறுபாடு காட்டும் தூசி போலவும் நிலத்தின்மீது விழும் காலைப் பனியின் ஒரு சிறு துளி போலவும் உலகம் முழுவதும் உம் கண்முன் உள்ளது. நீர் எல்லாம் வல்லவராய் இருப்பதால் எல்லார் மீதும் இரங்குகின்றீர் மனிதர்கள் தங்களுடைய பாவங்களை விட்டு மனந்திரும்பும் பொருட்டே நீர் அவற்றைப் பார்த்தும் பாராமல் இருக்கின்றீர். படைப்புகள் அனைத்தின் மீதும் நீர் அன்புகூர்கிறீர். நீர் படைத்த எதையும் வெறுப்பதில்லை. ஏனெனில் நீர் எதையாவது வெறுத்திருந்தால் அதைப் படைத்திருக்கவே மாட்டீர்! உமது திருவுளமின்றி எதுதான் நீடித்திருக்க முடியும்? அல்லது, உம்மால் உண்டாக்கப்படாதிருந்தால் எதுதான் காப்பாற்றப்படக்கூடும்? ஆண்டவரே, உயிர்கள்மீது அன்புகூர்கின்றவரே, நீர் எல்லாவற்றையும் வாழவிடுகின்றீர் ஏனெனில் அவை யாவும் உம்முடையன. உம்முடைய அழியா ஆவி எல்லாவற்றிலும் உள்ளது. ஆகையால் தவறு செய்பவர்களைச் சிறிதுசிறிதாய்த் திருத்துகின்றீர் அவர்கள் எவற்றால் பாவம் செய்கிறார்களோ அவற்றை நினைவுபடுத்தி அவர்களை எச்சரிக்கின்றீர் ஆண்டவரே, அவர்கள் தீமையிலிருந்து விடுபடவும் உம்மேல் நம்பிக்கை கொள்ளவுமே இவ்வாறு செய்கின்றீர்.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு.
- இறைவா உமக்கு நன்றி

## பதிலுரைப் பாடல்:

என் கடவுளே, என் அரசே! உம் பெயரை என்றும் போற்றுவேன்.

**திருப்பாடல்கள் 145: 1-2. 8-9. 10-11. 13-14**

என் கடவுளே, என் அரசே! உம்மைப் புகழ்ந்து ஏத்துவேன் உமது பெயரை என்றும் எப்பொழுதும் போற்றுவேன். நாள்தோறும் உம்மைப் போற்றுவேன் உமது பெயரை என்றும் எப்பொழுதும் புகழ்வேன். **பல்லவி**

ஆண்டவர் இரக்கமும் கனிவும் உடையவர் எளிதில் சினம் கொள்ளாதவர் பேரன்பு கொண்டவர். ஆண்டவர் எல்லாருக்கும் நன்மை செய்பவர் தாம் உண்டாக்கிய அனைத்தின்மீதும் இரக்கம் காட்டுபவர். **பல்லவி**

ஆண்டவரே, நீர் உருவாக்கிய யாவும் உமக்கு நன்றி செலுத்தும் உம்முடைய அன்பர்கள் உம்மைப் போற்றுவார்கள். அவர்கள் உமது அரசின் மாட்சியை அறிவிப்பார்கள் உமது வல்லமையைப் பற்றிப் பேசுவார்கள். **பல்லவி**

ஆண்டவர் தம் வாக்குகள் அனைத்திலும் உண்மையானவர் தம் செயல்கள் அனைத்திலும் தூய்மையானவர். தடுக்கி விழும் யாவரையும் ஆண்டவர் தாங்குகின்றார். தாழ்த்தப்பட்ட யாவரையும் தூக்கிவிடுகின்றார். **பல்லவி**

## இரண்டாம் வாசகம்:

நம் ஆண்டவராகிய இயேசுவின் பெயருக்கும் உங்களுக்கும் மேன்மை உண்டாகுக!

திருத்தூதர் பவுல் தெசலோனிக்கருக்கு எழுதிய

இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம் 1: 11 - 2: 2

சகோதரர் சகோதரிகளே, நாங்கள் உங்களுக்காக என்றும் இறைவனிடம் வேண்டுகிறோம். நம் கடவுள் தாம் விடுத்த அழைப்புக்கு உங்களைத் தகுதியுள்ளவராக்குவாராக! உங்கள் நல்லெண்ணம் ஒவ்வொன்றையும், நம்பிக்கையால் தூண்டப்படும் ஒவ்வொரு செயலையும் தம் வல்லமையால் நிறைவுறச் செய்வாராக! இவ்வாறு நம் கடவுளும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவும் அளிக்கும் அருளுக்கேற்ப, உங்களால் நம் ஆண்டவராகிய இயேசுவின் பெயருக்கும் அவரால் உங்களுக்கும் மேன்மை உண்டாகுக! சகோதரர் சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் வருகையைப் பற்றியும் அவரோடு நாம் ஒன்று கூடுவதைப் பற்றியும் உங்களுக்கு நாங்கள் கூற விழைவது: ஆண்டவருடைய நாள் வந்துவிட்டது என, இறைவாக்காகவோ அருளுரையாகவோ நாங்கள் எழுதிய திருமுகத்தின் செய்தியாகவோ யாராவது சொன்னால், நீங்கள் உடனே மனங்கலங்கி நிலைகுலைய வேண்டாம் திகிலுறவும் வேண்டாம்.

- இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு
- இறைவா உமக்கு நன்றி

நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி

அல்லேலூயா, அல்லேலூயா! தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்புகூர்ந்தார். அல்லேலூயா

நற்செய்தி வாசகம்

லூக்கா எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 19: 1-10

அக்காலத்தில் இயேசு எரிகோவுக்குச் சென்று அந்நகர் வழியே போய்க் கொண்டிருந்தார். அங்கு சக்கேயு என்னும் பெயருடைய செல்வர் ஒருவர் இருந்தார். அவர் வரிதண்டுவோருக்குத் தலைவர். இயேசு யார் என்று அவர் பார்க்க விரும்பினார் மக்கள் திரளாய்க் கூடியிருந்ததால் அவரைப் பார்க்க முடியவில்லை. ஏனெனில், சக்கேயு குட்டையாய் இருந்தார். அவர் முன்னே ஓடிப்போய், அவரைப் பார்ப்பதற்காக ஒரு காட்டு அத்தி மரத்தில் ஏறிக்கொண்டார். இயேசு அவ்வழியேதான் வரவிருந்தார். இயேசு அந்த இடத்திற்கு வந்தவுடன், அண்ணாந்து பார்த்து அவரிடம், ஹஹசக்கேயு, விரைவாய் இறங்கி வாரும் இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்““ என்றார். அவர் விரைவாய் இறங்கி வந்து மகிழ்ச்சியோடு அவரை வரவேற்றார். இதைக் கண்ட யாவரும், ஹஹபாவியிடம் தங்கப் போயிருக்கிறாரே இவர்““ என்று முணுமுணுத்தனர். சக்கேயு எழுந்து நின்று, ஹஹஆண்டவரே, என் உடைமைகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுத்துவிடுகிறேன் எவர் மீதாவது பொய்க்குற்றம் சுமத்தி எதையாவது கவர்ந்திருந்தால் நான் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்““ என்று அவரிடம் கூறினார். இயேசு அவரை நோக்கி, ஹஹஇன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று ஏனெனில் இவரும் ஆபிரகாமின் மகனே! இழந்து போனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்““ என்று சொன்னார்.

- இது கிறிஸ்து வழங்கும் நற்செய்தி.
- கிறிஸ்துவே உமக்கு புகழ்.

## விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

மறுமை வாழ்விற்கு அழைத்துக் கொள்ளப்பட்டிருக்கும் அனைத்து இறை ஊழியர்களுக்காகவும் மன்றாடுவோம்.

**வல்ல பரம்பொருளே - வானகத் தந்தையே - எம் இறைவா!** விசுவாசிகளின் மந்தையாகிய திருச்சபையில் மேய்ப்புப் பணிக்கு தங்களை அர்ப்பணித்ததோடு, வலுவிழந்தவற்றைத் தேற்றவும், வலிமை கொண்டவற்றைக் கண்காணிக்கவும் செய்து, ஏற்றுக்கொண்ட பொறுப்புகளை ஏற்றமுற நிறைவேற்றி, குறிக்கப்பட்ட காலத்தில் உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்டவர்களான எங்கள் திருத்தந்தையர்கள், ஆயர்கள், குருக்கள், அருட்சகோதரிகள் மற்றுமுள்ள துறவறத்தார்கள் உம்மோடும், உடனுள்ள அனைத்துப் புனிதர்களோடும் வானகப் பந்தியில் இடம் பெறும் வரம் வேண்டி, இறைவா! இன்று உம்மை மன்றாடுகிறோம்.

இறைநம்பிக்கை கொண்டவர்களாய் வாழ்ந்து, எதிர்நோக்கா பொழுதுகளில் இறப்பினைச் சந்திக்க நேர்ந்திருக்கும் எண்ணற்ற விசுவாசிகளுக்காக மன்றாடுவோம்.

**கருணைத் திருவுருவே - காத்து நிற்கும் பேரருளே - எம் இறைவா!** நரை திரை பருவங்களில் நலிவுற்று மரித்தவர்கள் - பிணிகளின் தாக்கத்தால் நம்மைப் பிரிந்து சென்றிருப்பவர்கள் எதிர்பாரா விபத்திற்கு இலக்காகி இறந்தவர்கள் - இத்தகு விசுவாசிகள் இறை இரக்கத்திற்கு உள்ளாகவும், இவர்களை வான்வீடு வரவேற்றுக் கொள்ளவும் வரம் வேண்டி, இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.

மெய்யங்கடவுளை அறியாது வையகத்தில் வாழ்ந்து மறைத்திருக்கும் ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்.

**எல்லை காணா பேரன்பே - இரக்கத்தின் ஊற்றே - எம் இறைவா!** மண்ணக மகவாக பிறப்பெடுத்து, பாவம் போக்கும் பலியாக இன்னுயிரை ஈந்து, மனுக்குலத்திற்கு மீட்பு எனும் பெருங்கொடையை வழங்கியிருக்கும் திருச்சுதன் இயேசுவை, உலகம் முழுமையாக அறிந்து போற்றவும், புகழ்ந்து ஏற்றவும் வேண்டுகிறோம். கிறிஸ்து இயேசுவை அறியாது வாழ்ந்து மரித்திருக்கும் ஆன்மாக்கள் மீது வானகக் கொடையாம் மீட்பு வழங்கப்படும் வரம் வேண்டி, இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.

ஏழ்மையில் வாடுவோருக்கு இரக்கம் காட்டப்படவும், இறை இரக்கத்தை நாம் பெற்றுக்கொள்ளவும் மன்றாடுவோம்.

**எளியோரின் அருட்சுனையே - வறியோரின் பெருந்துணையே - எம் இறைவா!** ‘ஏழைகளே! நீங்கள் பேறு பெற்றோர;” - என்கிறார் திருக்குமாரன் இயேசு. ‘எளியோரின் புலம்பலையும், வறியோரின் பெருமூச்சையும் கேட்டு இறைவன் எழுந்து வருகிறார;” என்கிறது திருப்பாடல். இல்லாதார்க்கு நாங்கள் இரக்கம் காட்டவும், உமது இரக்கத்தை அதன் கைம்மாறாக நாங்கள் பெற்று மகிழவும் வரம் வேண்டி, இறைவா! உம்மை மன்றாடுகிறோம்.

**ஒளியான எம் இறைவா!**

இளைஞர், இளம்பெண்கள் தங்கள் வாழ்வில் உம்மை அறியாமல் வாழ்ந்தக் காலங்களில் தங்கள் எண்ணங்களுக்கு ஏற்ப, இவ்வுலகச் சிற்றின்பங்களைப் பெரிதாகக் கருதி அதற்கு ஏற்பத் தங்கள் வாழ்வை இழந்த நிலையில் தங்களைத் தேற்றுவதற்கு யாரும் இல்லையே என்று ஏங்கித் தவிக்கும் இவர்களுக்கு நீர் உமது உடனிருப்பை நிறைவாகப் பொழிந்து உமது ஆவியின் அருளை நிறைவாய் பெற்றிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**உம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் உலகின் மேல் அன்பு கூர்ந்த தந்தையே!**

நாங்கள் ஒவ்வொருவரும் மனமாற்றம் பெற்று, நீர் எமக்குக்காட்டும் அன்பையும், பரிவையும் மற்றவர்களோடு பகிர்ந்து வாழ்ந்திட அருள் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**அனைவருக்கும் நீதி வழங்கும் எம் இறைவா!**

ஒருவர் நேர்மையாளர் என்பது அவரின் நற்செயல்களில் அல்ல. மாறாக, அவர் கடவுளுக்கு ஏற்புடையவரா என்பதில்தான் அடங்கியிருக்கிறது என்பதை எங்களில் குடும்பத்தில் அனைவரும் உணர்ந்து அதன்படி தாங்கள் வாழ்க்கையை மாற்றிக் கொள்ளவும், நேர்மையாளராக இருக்கவும் நல்மனதினைத் தரவேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

## இன்றைய சிந்தனை

“இயேசு சக்கேயுவை நோக்கி, “இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று ஏனெனில் இவரும் ஆபிரகாமின் மகனே! இழந்துபோனதைத் தேடி மீட்கவே மானிடமகன் வந்திருக்கிறார்“ என்று சொன்னார்““ (லூக்கா 19:9-10)

வரிதண்டுவோருக்குத் தலைவராக இருந்த சக்கேயு என்பவர் இயேசுவைச் சந்தித்த நிகழ்ச்சியை லூக்கா நற்செய்தியாளர் மட்டுமே பதிவுசெய்துள்ளார் (காண்க: லூக் 19:1-10). அந்த நிகழ்ச்சியோடு லூக்கா ““ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தி““ என்னும் பகுதியை நிறைவுக்குக் கொணர்கின்றார் (காண்க: லூக் 15:1-19:10). இருப்பினும், ஏழைகள் பற்றியும் தாழ்த்தப்பட்டோர் பற்றியும் அமைந்துள்ள இப்பகுதியின் இறுதியில் செல்வம் படைத்த ஒருவரின் வரலாற்றையும் லூக்கா இணைத்திருப்பது கருதத்தக்கது. இயேசு வழியாகக் கடவுள் வழங்குகின்ற மீட்பு எல்லா மனிதருக்கும் அவர் அளிக்கின்ற கொடை என்பது இதனால் விளங்குகிறது. இயேசுவைப் பின்பற்ற விருப்பம் தெரிவித்த இன்னொரு செல்வர் பற்றிய கதையை லூக்கா ஏற்கெனவே எடுத்துக் கூறியிருந்தார் (லூக் 19:18-23). ஆனால் அந்த மனிதர் தம்முடைய செல்வத்தை விட்டுக்கொடுக்க மனமில்லாமல் அதையே பற்றிக்கொண்டிருந்தார். சக்கேயு இதற்கு நேர் மாறாகச் செயல்படுகிறார். அதாவது, தமது செல்வத்தைப் பிறரோடு பகிர்ந்துகொள்ள அவர் முன்வருகிறார் (லூக் 19:8). சக்கேயு யார்? அவர் ““வரிதண்டுவோருக்குத் தலைவர்““ என அறிமுகம் செய்யப்படுகிறார். அக்காலத்தில் வரிதண்டுதல் என்பது எளிதில் செல்வம் சேர்ப்பதற்கு வழியாக அமைந்த ஒரு தொழில். பாலஸ்தீனத்தில் ஆதிக்கம் செலுத்திய உரோமை ஆளுநர்கள் வரிதண்டும் பொறுப்பைக் குத்தகைக்கு விட்டனர். ஆனால் வரிதண்டுவோர் மக்களிடமிருந்து அதிகமாக வரி வசூலித்தனர். எனவே, வரிதண்டுவோர் என்றாலே மக்களால் வெறுக்கப்பட்டனர்.

சக்கேயுவின் கீழ் பலர் வேலை செய்திருக்க வேண்டும். எனவேதான் லூக்கா அவரை ““வரிதண்டுவோருக்குத் தலைவர்““ என அடையாளம் காட்டுகிறார். சக்கேயு நல்ல வசதி படைத்த மனிதர். ஆனால் தான் திரட்டிய செல்வம் மக்களிடமிருந்து அநியாயமாகப் பெறப்பட்டது என்பதை அவர் ஏற்று அதற்காக மனம் வருந்துகிறார். அதே நேரத்தில் மக்களிடமிருந்து ““எதையாவது கவர்ந்திருந்தால் அதை நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுத்துவிடுகிறேன்““ என உறுதியளிக்கிறார். இவ்வாறு மனம் திரும்பிய சக்கேயு கடவுளை நாடி வந்ததை இயேசு காண்கின்றார். ““இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று““ என இயேசு அறிக்கையிடுகிறார். மனிதரின் கடந்த கால வாழ்க்கையில் பல குறைகள் இருந்தாலும், அவர்கள் அக்குறைகளை உணர்ந்ததும் மனம் திரும்பி கடவுளிடம் செல்லும்போது கடவுள் அவர்களை அன்போடு ஏற்றுக்கொள்கிறார். இதற்கு சக்கேயு சிறந்த உதாரணம். ““இழந்துபோனதைத் தேடி மீட்க வந்த““ இயேசு நம்மை இருகரம் விரித்து அழைக்கின்றார். அந்த அழைப்பை மனமுவந்து ஏற்பது நம் பொறுப்பு.

மன்றாட்டு:

இறைவா, எங்களை வரவேற்கக் காத்திருக்கும் உம்மை எந்நாளும் நாடிவர அருள்தாரும்.